இல்லாமல் பட்டா நிலங்களிலே இருப்பதால் தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு நிறைய எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. அரிசன ஹாஸ்டல் மண்கட்டடத்திலே நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிய கேள்வி இது. பொதுவாகக் கேள்வி கேட்டால் பொது வாகத்தான் பதில் வரும். பிரச்சனை தீரவேண்டுமென்றால் அதைப்பற்றி குறிப்பாகக் கேட்டால் அமைச்சர் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்.

2. தகவல் கோரல்.

(அ) இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து ஒரு நாள் அடையாள அர்த்தால் நடத்த சர்வ கட்சிக் கூட்டம் கூட்டுதல்

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்துத் தமிழகமே அர்த்தால் செய்யவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புத் தந்தார்கள். அது சம்பந்தமாக சபையிலே கூட அன்றைக்குப் பேசப்பட்டது. 31 ஆம் தேதி என்று தேதியைக் கூடச் சொன்னார்கள். ஆனால் அந்தக் கூட்டம் எந்த இடத்திலே எந்த நேரத்திலே எந்தத் தேதியிலே நடைபெறும் என்று தெரியவில்லை. ஆகவே அது பற்றிய தகவல் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தகவல் இப்போது தரப்படும். அன்றைய தினம் பேசியது, அலுவல் ஆய்வுக் குழுவிலே செய்வது போல் தங்கள் அறையிலேயே வைத்துக்கொள்ளலாம் என்பது. மேலவையிலே $12\frac{1}{2}$ மணிக்கு மேல் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே $12\frac{1}{2}$ மணிக்கு மேல் வைத்துக் கொள்ளலாம்.

(ஆ). சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் வரும் தண்ணீர்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற தண்ணீர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே திரு. ஆண்டித் தேவர் இதுபற்றி பிரச்னை எழுப்பியபோது கவனிக்கச் சொல்லி யிருக்கிறேன். உட்காருங்கள். ஏதாவது இருந்தால் அறையிலே வந்து சொல்லுங்கள். இங்கே சொல்லக்கூடாது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS